# ஒதுக்கீட்டு தலைப்பு 258 - மாவட்ட செயலகம், கண்டி
# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை - 2011 ஆம் ஆண்டு

## 1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பாடுகள்

(அ) மாவட்ட நிர்வாகம்

(ஆ) சட்டவாக்க நடவடிக்கைகள்

(இ) உள்ளகக் கட்டுப்பாட்டினை பலப்படுத்தல்

(ஈ) மதசார் மற்றும் ஒழுக்க அபிவிருத்தி

(உ) ஊழியர் நலன்புரி

(ஊ) ஒருங்கிணைத்தலும் நட்புரீதியான நிர்வாகமும்

(எ) அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் கம நெகும

(ஏ) அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமூகப் பங்களிப்பு

(ஐ) ஊடக ஒருங்கிணைப்பு

(ஒ) நிர்வாகக் கொள்கை அபிவிருத்தி மற்றும் பயிற்சி

(ஓ) தகவல் தொழிநுட்பப் பயன்பாடு

## 1.2 மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள பிரதேச செயலகங்கள்

(அ) கங்கவட்ட கோரலை

(ஆ) பாத்ததஹேவாஹட்ட

(இ) தெல்தோட்டை

(ஈ) உடபலாத்த

(உ) உடதும்பர

(ஊ) பாத்ததும்பர

(எ) பன்வில

(ஏ) ஹத்தரலியத்த

(ஐ) பூஜாபிட்டிய

(ஒ) தும்பனே

(ஓ) மினிப்பே

(ஔ) குண்டசாலை

(ஃ) தொழுவ

(க்) கங்க இஹல

(கா) யட்டிநுவர

(கி) உடுநுவர

(கீ) ஹாரிஸ்பத்துவ

(கு) அகுரணை

(கூ) மெத்ததும்பர

(கெ) பஸ்பாகே கோரளை

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

கண்டி மாவட்ட செயலகத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2012 ஒக்தோபர் 15 ஆம் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினங்களும்

மாவட்ட செயலகத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 685,006,100 தொகையாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 674,938,437 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சேமிப்புக்கள் ரூபா 10,067,663 ஆக இருந்ததுடன், அது மொத்த தேறிய ஏற்பாட்டில் நூற்றிற்கு 1.5 சதவீதத்தைக் கொண்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவினம் | மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு | தேறிய நிதிஏற்பாடு | 2011 திசெம்பர் 31 இல் சேமிப்புக்கள் | சேமிப்புக்கள் தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா | ரூபா | % |
| மீண்டுவருபவை | 606,050,000 | 615,806,100 | 32,324 | 0.01 |
| மூலதனம் | 69,200,000 | 69,200,000 | 10,035,339 | 14.50 |
| மொத்தம் | 675,250,000 | 685,006,100 | 10,067,663 | 1.47 |

#### (ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றால் வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளின் பயன்பாடு

வெவ்வேறு செயற்பாடுகளுக்காக 22 அமைச்சுக்களால் ரூபா 140,407,986 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடுகளும் 17 திணைக்களங்களினால் ரூபா 1,702,987,004 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடுகளுமாக ரூபா 4,276,050,990 ஆன நிதிஏற்பாடுகள் மாவட்ட செயலகத்திற்கு கிடைக்கப் பெற்றிருந்தன. அவற்றிலிருந்து செயலகத்தால் ரூபா 1,834,164,097 கூட்டுத்தொகை மற்றும் ரூபா 1,591,839,198 கூட்டுத்தொகையுமாக ரூபா மொத்தம் ரூபா 3,426,003,295 பயன்படுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ரூபா 850,047,695

கூட்டுத்தொகையான அல்லது கிடைக்கப்பெற்ற நிதிஏற்பாட்டில் நூற்றுக்கு 20 அளவில் சேமிக்கப்பட்டிருந்தன.

## 2.2 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

25801 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணம் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகளும் உள்ளவாறான பெறுமதிகளும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளவாறானவை | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானவை |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 54,950,000 | 53,971,675 | 37,000,000 | 61,046,038 | 250,000,000 | 191,038,288 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

2011 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு மாவட்ட செயலகத்தின் 6003/0000/00/0034/0000/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 195,747,962 ஆக இருந்தது.

## 2.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி அறிக்கைகள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் கண்டி மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இங்கே (அ) முதல் (எ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 முதல் 2.14 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

### (அ) ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றை பேணாமை

மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள சில பிரதேச செயலகங்களினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் என்பன பேணப்பட்டிருக்கவில்லை.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | பாத்ததும்பர, தும்பனே, உடுநுவர, யட்டிநுவர மற்றும் மெத்ததும்பர |
| கணனி தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | - மேற்படி - |

**(ஆ) கூட்டுத்திட்டம்**

சகல அமைச்சு செயலாளர்கள், மாகாண சபை தலைமைச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்கள் தொடர்புபடுத்தப்பட்ட 2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து எதிர்வரும் 03 ஆண்டுகளுக்காக கூட்டுத்திட்டமொன்று மாவட்ட செயலகத்தினால் ஆண்டின் ஆரம்பத்தின் போது தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அத்திட்டம் 2011 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

மேற்படி (ஆ) இல் குறிப்பிட்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டுத்திட்டத்திற்கு இணங்க 2010 மற்றும் அதற்குப் பின்னர் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் 2011 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

மேற்படி (ஆ) இல் குறிப்பிட்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 2002 செப்தம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆம் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மாவட்ட செயலகத்தினால் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2012 யூலை 05 ஆம் திகதி வரையில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2011 திசெம்பர் 31 வரையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) பொது வைப்புக் கணக்கு**

2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 8,372,461 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(எ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணம் தொடர்பான இணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளளப்பட்டன

(i) 25801 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணம் தொடர்பான 2011 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,087,550 ஆக இருந்ததுடன்,

அந்நிலுவையை அறவிடுவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ii) மாவட்ட செயலகத்தினால் கடன்களைக் கொடுப்பனவு செய்யும் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் பின்பற்றப்படாமல் ரூபா 958,287 கடன்கள் செலுத்தப்பட்டிருந்தன.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாமலும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

(i) உடதும்பர பிரதேச செயலகத்திற்கு 1993 ஆம் ஆண்டின் போது திட்ட அமுலாக்கல் அமைச்சிலிருந்து கிடைத்த உழவு இயந்திரமொன்றும் விவசாய உபகரணத் தொகுதியொன்றும் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

(ii) உடதும்பர பிரதேச செயலகத்திற்குரிய பதிவாளர் அலுவலகம் நடாத்திச் செல்லப்பட்ட 1505 சதுர அடி அளவிலான கட்டிடம் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் மூடப்பட்டிருந்தது. நீண்டகாலமாக மூடப்பட்டிருந்ததன் காரணமாக இக்கட்டிடம் சிதைவடைந்து உடைந்து விழக்கூடிய நிலையில் காணப்பட்டது.

(iii) கங்கஇஹல பிரதேச செயலகத்தினால் மோட்டார் வண்டியொன்று 2010 மே 12 ஆம் திகதி முதல் 2011 நவம்பர் 29 ஆம் திகதி பரிசோதனைத் திகதி வரையில் ஓட்டத்தில் ஈடுபடுத்தாமல் அலுவலக வளவில் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### (ஆ) பொருள் மெய்வினை மேற்கொள்ளல்

உடுநுவர பிரதேச செயலகத்தின் 2010 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பற்றாக்குறையாக காண்பிக்கப்பட்டிருந்த 31

உருப்படிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 757(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

கண்டி மாவட்ட செயலகத்திற்குரிய கண்டி யட்டிநுவர வீதியின் 71 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள மேலதிக மாவட்ட செயலாளருக்கான அரச விடுதி 2003 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் இலங்கை தரைபடை பொலிஸ் சேவை அதிரடிப்படையின் பாவனைக்காக 06 மாதங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. அவ்விடுதி 2012 ஆகஸ்ட் மாதம் வரையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) தீர்த்து வைக்கப்படாத பொறுப்புக்கள்**

மாவட்ட செலயகத்தினால் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு குறைவான ரூபா 1,095,325 பொறுப்புக்கள் காணப்படட்து.

**2.6 இணக்கமின்மைகள்**

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (i) நிதிப்பிரமாணம் | | |
| நி.பி 369(இ) | 38,125 | சீ தரமுடைய திணைக்களமொன்றினால் சேகரிக்கப்படுகின்ற பணத்தை மாவட்ட செயலகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய |

| | | |
|---|---|---|
| | | போதும் குண்டசாலை மற்றும் மெத்ததும்பர பிரதேச செயலகங்களால் சேகரிக்கப்பட்ட ரூபா 38,215 மற்றும் ரூபா 500 பணத்தை நானாவிதக் கொடுப்பனவுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| நி.பி 371(2) | 52,500 | வழங்கப்பட்ட துணைக் கட்டுநிதிக்குரிய செயற்பாடுகள் நிறைவுபெற்றவுடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், தும்பனே பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர் ஒருவரால் திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2011 பெப்ரவரி 10 ஆம் திகதி இரண்டு சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்ட ரூபா 52,500 ஆன முற்பணத்தை கணக்காய்வு திகதியான 2011 திசெம்பர் 07 ஆம் திகதி வரையில் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி 880 மற்றும் 1999 ஏப்ரல் 09 ஆம் திகதி 1/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் பிணைப் பொறுப்பு கட்டளைச் சட்டத்தின் 2 பி மற்றும் சீ பிரிவு | | காசு, முத்திரை, ஆதனங்கள், மற்றும் களஞ்சிய நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அனைத்து உத்தியோகத்தர்களும் பிணை பொறுப்பு வைக்கப்பட வேண்டிய போதிலும், 09 பிரதேச செயலகங்களுக்குரிய 206 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களால் அவ்வாறு பிணை பொறுப்பு வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி 751 | 4,118,648 | கிடைக்கப் பெறும் அனைத்துப் பொருட்களையும் பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய போதும் 05 பிரதேச செயலகங்களால் ரூபா 4,118,648 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த களஞ்சியப் பொருட்கள், இருப்புப் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | நி.பி 751(2) | - | அரசாங்க கட்டிடங்களில் உள்ள சகல மின்சார பொருத்திகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான பொருட் பதிவேடொன்று புறம்பாக பராமரிக்கப்பட வேண்டிய போதிலும், பாத்ததும்பர, தும்பனே, உடுநுவர மற்றும் யட்டிநுவர ஆகிய பிரதேச செயலகங்களில் அந்நியதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | நி.பி 1646 | - | பிரயாணம் தொடர்பான நாளாந்த ஓட்டப்பதிவேடுகள் மற்றும் மாதாந்தப் பொழிப்புக்கள் என்பன அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 04 பிரதேச செயலகங்களுக்குரிய வாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்டப்பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 1990 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | 06 மாதங்களுக்கு ஒரு முறை வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பாக முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு நுகரப்படும் எரிபொருளின் அளவின் பிரகாரம் எரிபொருள் நுகர்வினை ஓட்டப்பதிவேடுகளில் பேணப்பட வேண்டிய போதும் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 08 பிரதேச செயலகங்களுக்குரிய 14 வாகனங்கள் அவ்வாறான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | 1992 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 26/92 ஆம் இலக்கம் மற்றும் 1994 ஆகஸ்ட் 03 ஆம் திகதிய 26/92(1) மற்றும் 2002 பெப்ரவரி 25 ஆம் திகதிய 01/2002 ஆம் | | அரசாங்க வாகனங்களில் அரச இலட்சினை மற்றும் நிறுவனத்தின் பெயர் பொறிக்கப்பட வேண்டிய போதிலும், பஸ்பாகே கோரளை மற்றும் ஹத்தரலியத்த பிரதேச செயலகங்களுக்குரிய 04 வாகனங்கள் தொடர்பாக அத்தேவைப்பாடு நிறைவேற்றப் |

| | | |
|---|---|---|
| இலக்க சுற்றறிக்கைகள் | | பட்டிருக்கவில்லை. |
| 2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய 06/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை | 515,194 | குண்டசாலை மற்றும் தெல்தோட்டை பிரதேச செயலகம் என்பவற்றால் 10 ஓய்வூதியக் காரர்களுக்கு வாழ்க்கைச் செலவுப் படி கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| 2009 யூன் 12 ஆம் திகதிய எச்ஏ/டிஏ/12/27 ஆம் இலக்க பொது நிர்வாக அமைச்சு செயலாளரின் கடிதம் | - | அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள அரச வீடுகளில் கட்டாயமாக குடியிருக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்த போதும் பன்வில, யட்டிநுவர மற்றும் பஸ்பாகே கோரளை பிரதேச செயலகங்களுக்காக புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த விடுதிகளில் பிரதேச செயலாளர்கள் குடியிருந்தமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

(iii) ஏனைய
-----------------

| | | |
|---|---|---|
| 2011 ஆகஸ்ட் 02 ஆம் திகதிய 1/2011 ஆம் இலக்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | 3,435,000 | உடபலாத்த பிரதேச செயலகத்தினால் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சிறுநீர்ப்பாசனம், மகப்பேற்று சிகிச்சை, பாடசாலை மலசலகூடங்கள், முன்பள்ளி போன்ற அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு மட்டும் செலவிடக்கூடிய நிதிஏற்பாடுகளை அதற்குப் புறம்பாக அம்புலுவாவ உயிரினப் பல்வகைப்படுத்தல் தொகுதியின் கட்டிட நிர்மாணம், சுவர்கள், பாலங்கள் மற்றும் நுழைவு வீதி என்பவற்றை நிர்மாணிக்கவும் உபகரணங்களை வழங்கும் செயற்பாடு களுக்காக செலவிடப்பட்டிருந்தது. 2008 முதல் 2011 ஆம் ஆண்டுகளில் பன்முகப்படுத்தப்பட்ட நிதிஏற்பாடு, கிராமிய மக்களின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்காக செயற்படுத்த வேண்டிய செயற்திட்டத்திற்காக ரூபா 15,692,320 |

| | | |
|---|---|---|
| | | பெறுமதியான 24 செயற்திட்டங்கள் அம்புலுவாவ உயிரினப் பல்வகைப்படுத்தல் தொகுதியின் கட்டிட நிர்மாணம், நுழைவு வீதி பாலங்களை என்பவற்றை நிர்மாணிக்கவும் உபகரணங்களை வழங்குதல் போன்ற செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. உடபலாத்த சிங்ஹபிட்டிய பிரிவின் நூலகத்திற்கு அருகில் பாலமொன்றை நிர்மாணிப்பதற்காக 2010, 2011 ஆம் ஆண்டுகளில் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஏற்பாட்டின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 2,000,000 நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தி அம்புலுவாவ உயிரினப் பல்வகைப்படுத்தல் அலகின் நூலகத்திற்குச் செல்வதற்காக பாலமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் அவ்விடத்திற்கு அவ்வாறான பாலமொன்று தேவைப்படவில்லை யென்பது அவதானிக்கப் பட்டதுடன், நூலகக் கட்டிடத்திற்கு செல்வதற்கு கற்படிகளும் காணப்பட்டது. |
| 2009 நவம்பர் 26 ஆம் திகதிய 1629/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தின் i பகுதி 2 ஆம் திருத்திய கட்டளை | 9,200 | மிருகங்களைப் போக்குவரத்துச் செய்வதற்காக வழங்கப்படுகின்ற போக்குவரத்து அனுமதிப் பத்திரத்தை வழங்கும் போது போக்குவரத்துச் செய்யப்படுகின்ற ஒரு கால்நடைக்கு ரூபா 50 வீதம் கட்டணம் அறவிடப்பட்டு 1958 இன் 29 ஆம் இலக்க கால்நடைச் சட்டத்தின் கீழ் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதும் பன்வில மற்றும் பஸ்பாக கோரளே ஆகிய பிரதேச செயலகங்களால் 2010/2011 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்ட போக்குவரத்து அனுமதிப்பத்திரத்திற்காக கட்டணம் அறவிடப்பட்டு அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| 2006 யூலை 31 ஆம் திகதிய 21 ஆம் இலக்க சமுர்த்தி ஆணையாளர் நாயகத்தின் போசாக்கு படிக் கொடுப்பனவு சுற்றறிக்கை | 181,000 | வறிய குடும்பங்களின் கர்ப்பினிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு 20 மாதங்களுக்காக ரூபா 500 வீதம் போசனைப்படி கொடுப்பனவு வழங்கப்பட வேண்டிய போதிலும், 05 பிரதேச செயலகங்களால் சமுர்த்தி உத்தியோகத்தர் ஊடாக முறையான அறிவித்தல்களை வழங்காததன் காரணமாக மிகவும் குறைந்த அளவில் தாய்மார்களைத் தெரிவு செய்தமை மற்றும் அவர்களுக்கு 20 மாதங்கள் மேவுகை செய்யக்கூடிய வகையில் உரிய கொடுப்பனவுகளை வழங்காமையால் ரூபா 831,500 பெறுமதியான முத்திரைகள் செல்லுபடியற்றதாக்கப்பட்டிருந்தது. |
| 2011/01 ஆம் இலக்க சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டுகை அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | 1,270,651 | முன்பள்ளி பாடசாலை மாணவர்களுக்கு சுத்தமான பால் கோப்பையொன்று வழங்கும் நிகழ்ச்சித்திட்டம், சிறுவர் அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர் ஊடாக செயற்படுத்தப்பட வேண்டிய போதும் 04 பிரதேச செயலகங்களால் 2011 ஆம் ஆண்டில் 48 கிராம சேவகர் பிரிவுகளுக்கும் இந்நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக எவ்வித அறிவுறுத்தல்கள் வழங்கப்படாத காரணத்தால் செயன் முன்னேற்றம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்ட காரணத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டில் 46% |

| | | |
|---|---|---|
| | | அளவில் எஞ்சியிருந்தது. |
| 2006 ஏப்ரல் 10 ஆம் திகதிய 28 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை மற்றும் 2011 சனவரி 24 ஆம் திகதிய எச்ஏ/ஏடிடி/எஸ்ஈசீ/17/பொது ஆம் இலக்க பொது நிர்வாகச் அமைச்சு செயலாளரின் கடிதம் | 200,116 | அமைய அல்லது தற்காலிக அடிப்படையில் சேவைக்குச் சேர்த்துக் கொள்வதற்காக பொது நிர்வாகச் அமைச்சின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதும், அக்கட்டளைக்கு முரணாக பஸ்பாகே கோரலை பிரதேச செயலாளரால் 2010 ஆகஸ்ட் 13 ஆம் திகதியிலிருந்து தற்காலிக ஊழியர் ஒருவரைச் சேர்த்து 2011 திசெம்பர் 11 கணக்காய்வுத் திகதி வரை சம்பளம் கொடுக்கப்பட்டிருந்தது. |

## 2.7 செயற்திட்டத்தை அமுல்படுத்துவதில் பலவீனம்

கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட செயற்திட்ட தாமதங்கள் மற்றும் செயன்முன்னேற்றம் பெற்றுக்கொள்ளப்படாமல் இருந்த செயற்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### (அ) செயற்திட்டத்தை ஆரம்பிக்காமல் கைவிடுதல்

மாவட்ட செயலகத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| பிரதேச செயலகம் | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி | ஆரம்பிக்கப்படாமைக்கான காரணம் சுருக்கமாக |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| மெத்ததும்பர | துன்ஹின்ன பண்ணை வீதியின் கீழ் பகுதி | 50,000 | - | நிதி போதாமையால் அமுல்படுத்தப்படாமை |

| | | | | |
|---|---|---|---|---|
| | குழய்களைப் பொருத்துதல். | | | |
| யட்டிநுவர | கன்னோருவ கந்தகூடுவ கடவரதெனியா வீதியின் குறுக்கு வீதியை அபிவிருத்தி செய்தல் | 50,000 | 2011 திசெம்பர் 12 | திருத்திய செயற்திட்ட முன் மொழிவினை நடைமுறைப் படுத்துவதற்கு காலம் போதியதாக இல்லாமை |
| | கஹவத்துகொட பிட்டகடுவ வீதிக்கு கொங்கிரீட் இடல் | 50,000 | 2011 நவம்பர் 20 | செயற்திட்ட முன்மொழிவு வருட இறுதியில் கிடைத்த மையால் காலம் போதியதாக இல்லாமை |
| | சூரியகொடை உள் வீதிக்கு கொங்கிரீட் இடல் | 40,000 | 2011 நவம்பர் 15 | செயற்திட்ட முன்மொழிவு திருத்தம் செய்யப்பட்ட மையால் காலம் போதியதாக இல்லாமை |
| | கொரகதெனியா சனசமூக மண்டப நிர்மாணம் | 25,000 | 2011 திசெம்பர் 28 | முன்மொழிவினை செயற்படுத்த காலம் போதியதாக இல்லாமை |
| தும்பனே | உடுவ அலோட்டுவத்த விவசாய வீதி | 200,000 | 2011 திசெம்பர் 15 | ஒப்பந்த சங்கம் செயற்பாட்டு நிலைமையில் காணப்படாமை |
| | கதன்ஹேன விலிருந்து அஜன்தா பேக்கரி வரை செல்லும் விவசாய வீதி | 300,000 | 2011 திசெம்பர் 15 | ஒப்பந்த சங்கம் செயற்பாட்டு நிலைமையில் காணப்படாமை |
| | சியம்பலாவத்த விவசாய வீதி | 300,000 | 2011 திசெம்பர் 15 | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | எலமல்பொத்த துல்லாவ உடதெனிய விவசாய வீதி | 100,000 | 2011 திசெம்பர் 15 | - மேற்படி - |
| | தென்னேவெல அரம்பேவெல வாய்க்கால் இலிருந்து அலி அணைக்கட்டு வரையான விவசாய வீதி | 300,000 | 2011 திசெம்பர் 06 | - மேற்படி - |
| | உடுவ உடதெனிய கால்வாயின் ஓரச் சுவர் நிர்மாணம் | 30,000 | | கற்கள், மணல் இல்லாமையால் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு சங்கம் விருப்பமின்மையை தெரிவித்தமை |
| மாவட்ட செயலகம் | பூஜாபிட்டிய பிரதேச செயலகத்தின் உத்தியோகபூர்வ விடுதி | 2,000,000 | - | காணிப் பிரச்சினை தீர்க்கப்படாமையால் நிதிஏற்பாடு வேறு செயற்திட்டத்திற்கு பயன்படுத்தப்பட்டது |

### (ஆ) பூர்த்தி செய்யாமல் கைவிடப்பட்ட செயற்திட்டம்

கீழே காட்டப்பட்டுள்ள செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தன.

| பிரதேச செயலகம் | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப் பட்ட திகதி | 2011 திசெம்பர் 31 வரையில் செலவினம் | கைவிடப்பட்டமைக்கான காரணம் |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | ரூபா | |
| தும்பனே | கினிகம கிழக்கு துன்பல வாய்க்கால் சுவரை அபிவிருத்தி செய்தல் | 350,000 | 2011.10.28 | 78,639 | தொடர் வேலை |
| | போகல மக்கள் கிராமத்தின் தோட்ட வீதிகளுக்கு நுழையும் வீதி | 100,000 | 2011.10.21 | 32,859 | - மேற்படி - |

**(இ) செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்வதில் தாமதம்**

கீழே காட்டப்பட்டுள்ள செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப் பட்ட திகதி | பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி | 2011 திசெம்பர் 31 வரையில் செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | | | ரூபா | |
| பாத்ததும்பறை பிரதேச செயலகத்திற்கு புதிய கட்டிடமொன்றை நிர்மாணித்தல் | 7,343,000 | 2011.07.22 | 2011.12.10 | 2,508,575 | ............சந்தையில் மூலப்பொருளுக்கு தட்டுப்பாடு |

**(ஈ) நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றம் அடையப்பெறாத செயற்திட்டங்கள்**

(i) உடதும்பர பிரதேச செயலகப் பிரிவில் குடியிருக்கும் ஒருவருக்கு பாதிக்கப்பட்ட தமது வீட்டை மீளக் கட்டியெழுப்புவதற்காக ரூபா 50,000

விரிவாக்கல் இடர் கடன் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட நிலையப் பரிசோதனையின் போது வீடு மீள நிர்மாணிக்கப்படாமல் இருந்ததுடன், வழங்கப்பட்ட நிதியை மீளப்பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஜாதிக சவிய கமநெகும 2011 அபிவிருத்தி முன்மொழிவின் கீழ் ரூபா 100,000 நிதிஏற்பாட்டில் ஹத்தரலியத்த வெளிபண்டியகொட தம்பகொல்ல வீதிக்கு கொங்கிரீட் இடப்பட்டிருந்தது. வீதியின் நடுவில் 03 இடங்களில் உடைத்துப் பரிசோதித்த போது மதிப்பீட்டின் பிரகாரம் 4" தடிப்பில் இருக்க வேண்டிய கொங்கிரீட் தளத்தின் தடிப்பு 1" அளவில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக 3 கியுப் கொங்கிரீட்டிற்காக ரூபா 87,750 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. அத்தோடு மேற்குறித்த வீதி உரிய தரத்தில் நிர்மாணிக்கப்படாமையால் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 100,000 பணமும் பயனற்ற செலவினமாக இருந்ததுடன், இதற்கு உத்தியோகத்தர்களின் பலவீனமான மேற்பார்வையும் காரணமாக இருந்தன.

## 2.8 வங்கி கணக்கை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்

### சீராக்கம் செய்யப்பட வேண்டிய நிலுவை

மாவட்ட செயலகத்தினால் 2011 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகளில் காணப்பட்ட சீராக்கம் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| சீராக்கம் தொடர்பான விபரம் | காலப்பகுப்பாய்வு<br>06 மாதங்களுக்கு மேல் 1 ஆண்டிற்கு கீழ் | மொத்தம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| (i) வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவுக்கு முன் வைக்கப்படாத காசோலைகள் | 35,128 | 35,128 |

| | | | |
|---|---|---|---|
| (ii) | இனங்காணப்படாத செலவுகள் | 89,273 | 89,273 |
| | | | ------------ |
| | | | 124,401 |
| | | | ======= |

## 2.9 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையுடையதாக காணப்பட்டது. தெரிவுப் பரிசோதனையின் போது அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

(அ) பாத்தஹேவாஹட்ட பிரதேச செயலகத்தின் பதவியணியினருக்காக மலசலகூடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 671,103 மொத்த கிரய மதிப்பீட்டின் படி 2010 ஆகஸ்ட் 06 ஆம் திகதி நேர்உழைப்பு அடிப்படையில் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மதிப்பீட்டைத் தயாரித்தல், மேற்பார்வை செய்தல், பொருட்கள் மற்றும் உழைப்பினை வழங்கல் மற்றும் கொடுப்பனவு பட்டியலை உறுதிப்படுத்தல் என்பவற்றை தொழிநுட்ப உத்தியோகத்தராலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிறைவேற்றப்பட்டிருந்த வேலை விடயங்களும் வழங்கப்பட்டு பொருத்தப்பட்டிருந்த பொருட்களின் தரமும் மிகவும் பலவீனமான நிலையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) உடபலாத்த பிரதேச செயலகத்தினால் 2004 ஆம் ஆண்டின் போது பன்முகப்படுத்தப்பட்ட நிதியத்தைப் பயன்படுத்தி ரூபா 196,400 பெறுமதியான 400 கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் அந்த கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டு கணக்காய்வு தினமான 2011 நவம்பர் 05 ஆம் திகதி வரையில் 7 ஆண்டுகள் கடந்திருந்த போதும் குறித்த நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்காமல் காணப்பட்டன.

(இ) 2011 கமநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் விசேட செயற்திட்டமொன்றான மழையினால் சேதமடைந்த சிறு நீர்ப்பாசனங்கள் புனரமைப்பின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த உடதும்பர மத்திமிஹிய வாய்க்கால் மற்றும்

எல்லென்பொள ஆகிய நீர்ப்பாசன அணைக்கட்டுகள் பௌதீக பரிசோதனையின் போது மழையினால் சேதமடைந்ததாக அவதானிக்கப்படவில்லை. அத்துடன், இதற்குமுன்னர் நிர்மாணம் நிறுத்தப்பட்டிருந்த இடங்களில் இருந்து எஞ்சியிருந்த வேலைப்பகுதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

## 2.10 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்ற தன்மையுடையதாக இருந்தன. அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

### (அ) கொள்வனவு வழிகாட்டிக் கோவை வழிகாட்டியிலிருந்து விலகியமை

(i) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6:2:2 பிரிவின் பிரகாரம் போட்டி விலைகளை முன்வைப்பதற்காக ஆகக்குறைந்தது 07 நாள் காலம் வழங்க வேண்டிய போதிலும், 2011 ஆம் ஆண்டில் 04 பிரதேச செயலகங்களால் ரூபா 1,226,720 பதாகை மற்றும் உணவுப் பொருள் கொள்வனவிற்காக விலை கோருவதற்கு அதற்கும் குறைந்த காலம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் கைநூலில் 2.14.1 ஆம் பந்தியின் பிரகாரம் சந்தை விலை பெற்றமைக்காக ஆகக் குறைந்தது ஐந்து நிறுவனங்களிடமிருந்து விலை விபரங்கள் கோரப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் 09 பிரதேச செயலகங்களால் ரூபா 2,134,607 ஆன களஞ்சியப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

### (ஆ) ஏனைய

உடபலாத்த பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 77 பல்லேவெல கம்பளையில் அமைந்துள்ள அரச கட்டிடம் சிறிய பெருந்தோட்ட முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு முறையான உடன்படிக்கையொன்றுக்கு வராமல் 2010 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 25,000 மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. 2011 நவம்பர் வரையில் அதன் மூலம் கிடைத்த ரூபா 500,000 ஆன வருமானம் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமல் தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது.

## 2.11 மோசடித் தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட மோசடித் தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) உடபலாத்த பிரதேச செயலகத்தினால் அம்புலுவாவ மேற்பகுதி வீதியை தயார்படுத்தும் வேலைக்காக 2010 ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட நிதிஏற்பாட்டின் கீழ் ரூபா 576,000 ஒதுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் உரிய நிர்மாணம் மேற்கொள்ளப்படாமல் உரிய அங்கீகாரமின்றி அந்நிதிஏற்பாட்டை பயன்படுத்தி அம்புலுவாவ உயிரியல் பல்வகைப்படுத்தல் அலகின் பார்வையாளர் மண்டபம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ஆ) உடதும்பர பிரதேச செயலகத்திற்குரிய மோட்டார் சைக்கிலொன்று கடமை நடவடிக்கைளுக்காக சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவருக்கு 2007 மே 30 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2011 நவம்பர் 17 ஆம் திகதி வரை அந்த உத்தியோகத்தரால் மோட்டார் சைக்கில் பயன்படுத்தப்பட்டிருந்த போதும் 2005 ஆம் ஆண்டின் பின்னர் வருமான அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதி சான்றிதழ் என்பன பெற்றுக்கொள்ளப்படாமல் இருந்ததுடன், கடமையில் ஈடுபட்டமைக்கான உறுதிப்படுத்துவதற்கான நாளாந்த ஓட்டப்பதிவேடுகளும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) ஜாதிக சவிய கமநெகும 2011 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பஸ்பாக கோரளே பிரதேச செயலாளரினால் ரூபா 100,000 வீதமான நிதிஏற்பாட்டின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டிருந்த வரகாவ தபால் அலுவலக வீதிக்கு கொங்கிரீட் இடல் மற்றும் மீவத்த பொல்வத்த வீதி கொங்கிரீட் இடும் நிர்மாண வேலைகளில் செய்யப்படாத வேலைகளுக்காக முறையே ரூபா 14,089 வீதம் ரூபா 28,178 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

## 2.12 நட்டங்களும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) ஹத்தரலியத்த பிரதேச செயலாளர் பயன்படுத்திய வண்டி 2010 திசெம்பர் 10 ஆம் திகதி விபத்திற்குட்பட்டிருந்ததன் பின்னர் ரூபா 146,524 பணம் செலவிடப்பட்டு வாகனம் திருத்தியமைக்கப்பட்டிருந்தது. அந்த விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு முழுமையான அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தொலுவ பிரதேச செயலாளர் பயன்படுத்திய மோட்டார் வண்டி 2010 ஒக்தோபர் 03 ஆம் திகதி கடமையல்லாத பயணமொன்றில் ஈடுபட்டிருந்த போது விபத்திற்குட்பட்டு ரூபா 715,853 பணம் செலவிடப்பட்டு வாகனம் திருத்தியமைக்கப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு முழுமையான அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் விபத்து நிகழ்ந்து 03 மாதங்களுக்குள் இறுதி பரிசோதனையை மேற்கொண்டு பொறுப்புக்கள் நிச்சயிக்கப்பட வேண்டிய போதும் 03 பிரதேச செயலகங்களுக்குரிய 03 வாகனங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.13 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற வகையில் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) உடபலாத்த பிரதேச செயலகத்திற்குரிய தெல்கொல்ல பிபில வீதிக்கு கொங்கிரீட் இடுவதற்காக ஜாதிக சவிய கமநெகும 2010 மற்றும் 2011 நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் கிடைத்த நிதிஏற்பாட்டின் அடிப்படையில் ரூபா 482,927 செலவிடப்பட்டிருந்தது. இவ்வீதியைப் பயன்படுத்தும் நலனாலிகளின் எண்ணிக்கை 04 பேருக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவகமொன்றில் உள்ள பதவியணியினரைக் கருத்திற்கொள்ளாமல் விரலடையால இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டிய போதும், பூஜாபிட்டிய பிரதேச செயலகத்தால் 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 64,500 பணம் செலவிடப்பட்டு கைவிரலடையாள இயந்திரம் பொருத்தப்பட்டிருந்த போதிலும், அந்த இயந்திரம் பொருத்தப்பட்ட நாளிலிருந்து உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் தொடர்பாக அச்சிடப்பட்ட பிரதிகள் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. இதன் காரணமாக மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளைப் பின்பற்றுவதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் தவறியிருந்ததுடன், அதற்காக செலவிடப்பட்ட செலவினமும் பயனற்றதாக இருந்தது.

**2.14 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர்**

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை வருமாறு

| ஊழியர் வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 01 | 01 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 66 | 62 | 04 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 1874 | 1602 | 262 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 227 | 202 | 25 |
| (v) | ஏனையவை(அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படையில்) | - | 14 | - |
| | மொத்தம் | 2168 | 1881 | 291 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் இறுதி வரையில் 291 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 18/2011 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நாடளாவிய ரீதியாக சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் 05 ஆண்டுகள் ஒரே அலுவலகத்தில் சேவை புரிந்திருந்தால் உடனடியாக இடமாற்றம் வழங்கப்பட வேண்டிய போதும், 06 பிரதேச செயலகங்களுக்குரிய 104 உத்தியோகத்தர்கள் அக்கால எல்லையை மிகைத்து சேவை புரிந்து வருகின்றனர்.

(iii) தொழுவ பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் பதவி 2009 ஆம் ஆண்டிலிருந்து 03 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக வெற்றிடமாக காணப்பட்ட போதும், அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன், 2009 ஆம் ஆண்டிலிருந்து 2011 நவம்பர் மாதம் வரை அப்பதவியில் பதில் கடமை புரிவதற்காக ரூபா 104,616 பதில் கடமை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.

(iv) பன்வில பிரதேச செயலகத்தின் சிறாப்பர் பதவியில் கடமை புரிவதற்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படாமல் இருந்ததுடன், வருமான சேகரிப்பின் போது விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரினால் பொது வருமானத்தைப் பொறுப்பேற்கும் போது பற்றுச்சீட்டினை வழங்கி வருமானங்களை சேகரிக்கும் முறைமையொன்று பின்பற்றப்பட்டிருந்தது.

## 2.15 உள்ளகக் கட்டுப்பாடு

### முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு குழுவை செயற்படுத்தல்

2009 யூன் 09 ஆம் திகதிய முகாமைத்துவ கணக்காய்வுச் டப்ளம்ஏ/2009(i) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 05 மற்றும் 06 பந்திகளின் பிரகாரம் உருவாக்கப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் உறுப்பினர் அணிக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் பிரதிநிதி ஒருவர் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. முதலாவது கூட்டம் 2012 ஆகஸ்ட் 13 ஆம் திகதி நடாத்தப்பட்டிருந்த போதும் 2012 செப்தம்பர் 12

ஆம் திகதி கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் அதன் செயன்முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.